கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/ இரண்டாம் அரையாண்டுச் சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III

2012/2013 (ஜுலை, ஆகஸ்ட் 2015)

## TLS 4204 இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியத்துக்கு அறிமுகம்

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (அ) "உலக இலக்கியம்" என்ற எண்ணக்கருவை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) ஜோன் வூல்ஃப்காங் வொன் கோதே (Johann Wolfgang Von Goethe) உலக இலக்கிய வளர்ச்சியிற் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

2. "ஒப்பிலக்கியம் பண்பாடுகளைக் கடந்து பிரதிகளை ஆராய்வதில் ஈடுபடுகிறது" உலக இலக்கியக் கற்கையில் ஒப்பிலக்கியத்தின் அவசியம் குறித்த சூசன் பஸ்னட் (Susan Bassnett) இன் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (25 புள்ளிகள்)

3. சோவியத் ரஷ்ய இலக்கிய வளர்ச்சியில் அன்னா அக்மதோவா (Anna Akmatova) பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க. (25 புள்ளிகள்)

4. "ஆபிரிக்கக் கவிதைகள் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான குரல்களாக வெளிப்படுகின்றன." இக்கூற்றை ஆராய்க. (25 புள்ளிகள்)

5. "மூன்றாம் உலக நாடுகளில் தோன்றிய பெண்களின் கவிதைகள் அனைத்துவிதமான ஒடுக்குமுறைகளையும் வெளிப்படுத்துகின்றன." இக்கூற்றை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

   (அ) எட்வர்ட் செயித் (Edward Said)

   (ஆ) மக்ஸிம் கோர்க்கி (Maxim Gorky)

   (இ) கப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் (Gabriel Garcia Marquez)

   (ஈ) சின்னுவா அச்சிபே (Chinua Achebe)

   (உ) கூகி வா தியாங்கோ (Ngugi Wa Thiango) (12½x 2 புள்ளிகள்)